கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.107/2015

பி.வா.சா.2

| பெயர் | **செல்வராஜ்** | தொழில் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | **சின்னமநாயக்கர்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 16.12.2022 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

பி.வா.சா.2 செல்வராஜ் தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் 3 ம் தரப்பினர். என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க 2 ம் பிரதிவாதி தங்கப்பாண்டி என்னை அழைத்து வந்தார். அவர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 02.04.1985 ல் நான் பிறந்தாக சொல்லியுள்ளேன். என்னுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆகும் பொழுது எனக்கு என்ன வயது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என்னையும், என் சகோதிரி பாப்புவை வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் பாப்பாத்தியம்மாள் 1996 ல் காலமானார். அதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் தாயார் சுமார் 40 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார் எனவும் அதை மறைத்து வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதியின் குடும்ப அட்டையில் என்னுடைய பெயரும் சேர்ந்துள்ளது என்பதை எடுத்துரைக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வாதியின் குடும்ப அட்டையில் என்னுடைய பெயர் இல்லை என்றும், தன் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் சகோதரி வெள்ளைத்தாய் உள்ளாரா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் சகோதரி வெள்ளைத்தாய் எனவும், அவர் மகன் தான் செல்வராஜ் எனவும் ஆக வாதியின் குடும்ப அட்டையில் உள்ள நபர் நான் அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதியும், என்னுடைய தாயாரும் காணவன் மனைவியா எந்த காலத்திலும் வாழ்ந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் மகன் ஜெயபாண்டியை எனக்கு தெரியாது. என்னுடைய தாயாருக்கு நான் ஈமக்காரியம் செய்தேன் என்று சொன்னால் வாதி தான் செய்தார். என் தாயாருக்கு நான்தான் ஈமக்காரியம் செய்தேன் எனவும், வாதி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக வாதிதான் ஈமக்காரியம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிதான் சொத்துகளை அனுபவம் செய்து வந்து பலன்களை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சொத்துகளை அனுபவம் செய்து வருவதால் வாதி பாகப்பிரிவினைக்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் மக்ன ஜெயபாண்டி ஜவுளி வியாபாரம் செய்து அதில் கிடைத்த வருமானத்தை வைத்து வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தங்கப்பாண்டி கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.12.17 11:29:36 +0530

Additional District Judge,

Dindigul.